இஸ்லாமியா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மேல்விஷாரம், இராணிப்பேட்டை மாவட்டம்
வகுப்பு: 11 பயிற்சி வினாத்தாள் இயல் 1 -- 8 ஒரு மதிப்பெண் (2022 – 2023)

## ஒரு மதிப்பெண் வினா விடை

1. தவறான இணையைத் தேர்வு செய்க
அ) மொழி + ஆளுமை -- உயிர் + உயிர் ஆ) கடல் + அலை -- உயிர் + மெய்
இ) தமிழ் + உணர்வ -- மெய் + உயிர் ஈ) மண் + வளம் -- மெய் +மெய்
2. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக
அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்
ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது
இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும்
ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கனும்.
உ) தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.
3. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க
அ) அ.முத்துலிங்கம் -- யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் -- நன்னூல்
இ) சு.வில்வரத்தினம் -- ஆறாம் திணை ஈ) இந்திரன் -- பேச்சுமொழியும் கவிதை மொழியும்
i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ
4. கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்
-- அடிமோனையைத் தெரிவு செய்க
அ) கபாடபுரங்களை – காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள
இ) கபாடபுரங்களை – காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத
5. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க
அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம் இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்
6. பாயிரம் இல்லது .............................. அன்றே. அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
7. ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது இவ்வரிகள் உணர்த்தும் கருத்து
அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்
ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை
இ) எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது
ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது
8. விரல்முனையைத் தீயிலே தோய்த்து ......................... சுவரெலாம் எழுத வேண்டும்
அ) தெருக்களின் ஆ) வீடுகளின் இ) திசைகளின் ஈ) கதவுகளில்
9. நிறைமணி தந்தவள் ..............................................
அ) அன்னை ஆ) தமிழன்னை இ) பாரத அன்னை ஈ) இந்திய அன்னை
10. காலத்தால் அழியாதது ....................................
அ) தமிழ் மொழி ஆ) ஆங்கில மொழி இ) பிரெஞ்சுமொழி ஈ) இந்தி மொழி
11. ........................................ தொடக்கி வைத்து என்னம்மை மண்ணிலே தீட்டி எழுதுவித்தாள்
அ) ஏடு ஆ) இலக்கணம் இ) கவிதை ஈ) பாடல்
12. "தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை,
வேரில்லாத மரம், கூடில்லாத பறவை"– என்றவர்
அ) இரசூல் கம்சதோவ் ஆ) மகாகவி பாரதி இ) பாரதிதாசன் ஈ) கவிமணி தேசியவிநாயம் பிள்ளை
13. குயில் என்னும் இலக்கிய இதழை நடத்தியவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) நாமக்கல் கவிஞர் ஈ) கவிமணி
14. புதுவை அரசின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் எது? இயற்றியது யார்?
வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
அ) கவிமணி ஆ) பாரதியார் இ) நாமக்கல் கவிஞர் ஈ) பாரதிதாசன்
15. பாரதிதாசன் எழுதிய எந்த நூலிற்கு சாகித்ய அகாதெமி விருது வழங்கப்பட்டது.
அ) பிசிராந்தையார் நாடகம் ஆ) குடும்பவிளக்கு இ) பாண்டியன் பரிசு ஈ) இருண்டவீடு

## பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க

1. வாடகை 2. மாதம் 3. போலீஸ் 4. நிச்சயம் 5. உத்திரவாதம் 6. சந்தோஷம் 7. சம்பளம்
8. ஞாபகம் 9. வருடம் 10. தேசம் 11. வித்தியாசம் 12. உற்சாகம் 13. விசா 14. பாஸ்போர்ட்
15. கம்பெனி 16. பத்திரிகை 17. கோரிக்கை 18. யுகம் 19. ராச்சியம் 20. சரித்திரம்
21. முக்கியத்துவம் 22. சொந்தம் 23. சமீபம் 24. தருணம்

**கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலைப் படித்துச் செய்திக் கட்டுரையாக மாற்றுக.**

நிகழ்ச்சி நிரல்

**"அரியன கேள் புதியன செய்" (திங்கள் கூடுகை)**

**நேரம்:** 2.30 பிற்பகல் **இடம்:** அ.மே.நி.பள்ளி

| | |
|---|---|
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை – மாணவர் இலக்கியச்செல்வன் |
| 2.40 | தலைமையுரை -- திரு. எழிலன், தலைமை ஆசிரியர் |
| 2.50 | சிறப்புரை – கவிஞர் வாணி "புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை |
| 3.45 | நன்றியுரை – மாணவர் ஏஞ்சலின் |
| 4.00 | நாட்டுப்பண். |

**தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக**

1) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்
2) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி
3) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.
4) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.
5) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?
6) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்த நாடு வந்தனர்.

**கலைச்சொல் அறிவோம்.**

1) Aesthetics 2) Jornalist 3) Art Critic 4) Book Review
5) Migration 6) Philosopher

**வேர்ச்சொற்களைத் தொடர்களாக மாற்றுக**

அ) வா ஆ) பேசு இ) ஓடு உ) பாடு

**மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

1. உலை, உளை, உழை 2. வலி, வளி, வழி 3. கலை, களை, கழை 4. கனை, கணை
5. குரை, குறை 6. பொரி, பொறி

**இயல் -- 1** **தமிழாக்கம் தருக**

1. The Pen is mightier than the Sword
2. Winners don't different things, they do things differently
3. A picture is worth a thousand words.
4. Work while you work and play while you play
5. Knowledge rules the world

**இயல் -- 2**

1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   அ) ஏதிலிக்குருவிகள் -- மரபுக் கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை
   இ) யானை டாக்டர் -- குறும்புதினம் ஈ) ஐங்குறுநூறு -- புதுக்கவிதை
2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன
   அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
3. "வான் பொய்த்தது"– என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்
   அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
   இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது
4. கருப்பட்டி பனங்கற்கண்டு போன்றவை
   அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்
   i) அ – மட்டும் சரி ii) ஆ – மட்டும் சரி iii) இரண்டும் சரி iv) அ – தவறு ஆ – சரி
5. பிழையான தொடரைக் கண்டறிக
   அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்
   ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.
   இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது
   ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறியமுடியும்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

6. யானை டாக்டர் குறும்புதினத்தின் ஆசிரியர்
   அ) ஜெயமோகன் ஆ) ஜானகிராமன் இ) சின்னப்பா ஈ) ஜெயராமன்
7. பொருத்துக
   அ) அடி அகரம் ஐ ஆதல் -- 1) செங்கதிர்
   ஆ) முன் நின்ற மெய் திரிதல் -- 2) பெருங்கொடை
   இ) ஆதிநீடல் -- 3) பைங்கூழ்
   ஈ) இனமிகல் -- 4) காரிருள்
8. தமிழ்நாட்டின் மாநில் மரம் எது?
   அ) தென்னை ஆ) வாழைமரம் இ) பனைமரம் ஈ) நெல்லிமரம்
9. நெல்லுக்கு ஊடுபயிராக போடுவது
   அ) கரும்பு ஆ) உளுந்து இ) கடுகு ஈ) வெங்காயம்
10. ஏழைகளின் கற்பக விருட்சம் எது
   அ) பனைமரம் ஆ) கருப்பட்டி இ) பனங்கற்கண்டு ஈ) நொங்கு
11. வேளாண் மந்திரங்கள் எத்தனை
   அ) 9 ஆ) 10 இ) 8 ஈ) 5
12. தகப்பன்கொடி என்ற புதினத்தின் ஆசிரியர்
   அ) அழகிய பெரியவன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ நாமக்கல் கவிஞர்
13. உலக சிட்டுக்குருவிகள் நாள்
   அ) மார்ச் - 22 ஆ) மார்ச் - 20 இ) மே - 22 ஈ) மே – 20
14. மூன்றடி சிறறெல்லையும் ஆறடி பேரெல்லையும்கொண்ட நூல்
   அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) நற்றிணை ஈ) ஐங்குறுநூறு
15. வடகரை நாட்டில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த பறவை
   அ) நாரை பறவை ஆ) தூக்கணாங் குருவி இ) உள்ளான் பறவை ஈ) கழுகு பறவை
16. அரவிந்தன் என்னும் இயற்பெயர் கொண்ட கவிஞர்
   அ) அழகிய பெரியவன் ஆ) பிரமிள் இ) பெரியவன் கவிராயர் ஈ) ஜலாலுதீன் ரூமி
17. வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் பாடும் பண்
   அ) நீளாம்பரி ஆ) சிந்துபைரவி இ) இந்தளம் ஈ) ஆதிராகம்
18. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   அ) ஏதிலிக்குருவிகள் -- மரபுக் கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை
   இ) யானை டாக்டர் -- குறும்புதினம் ஈ) ஐங்குறுநூறு -- புதுக்கவிதை

**கலைச்சொல் அறிவோம் இயல் -- 2**

1. Organic Farming 2. Value Added Product 3. Chemical Fertilizers 4. Root Nodes
5. Shell Seeds 6. Wearer Bird 7. Farm Yard Manure 8. Harvesting

**இயல் -- 2**

1. Just Living is not enough. One must have sunshine, freedom and a little flower
2. In nature, Light creates the colour. In the picture, colour creates the Light
3. Look deep into nature and then you will understand everything better
4. Simplicity is natures first step. And the last of art
5. Roads were made for journeys not destinations

**கீழ்க்காண் விளம்பரத்தைப் பத்தியாக மாற்றி அமைக்க**

உடல் வளர்த்தேன்! உயிர் வளர்த்தேன்!

**இயற்கை உணவுத் திருவிழா**

**நாள்:** தை 5 முதல் 11 வரை **நேரம்:** மாலை 6 -- 10 மணி **இடம்:** தீவுத்திடல், சென்னை

| | |
|---|---|
| ஆவாரம்பூச் சாறு | தூதுவளைச் சாறு |
| குதிரைவாலிப் பொங்கல் | சாமைப் பாயசம் |
| வாழைப்பூ வடை | கேழ்வரகு உப்புமா |
| தினைப் பணியாரம் | கம்புப் புட்டு |
| வல்லாரை அப்பளம் | அகத்திப்பூ போண்டா |
| முடக்கத்தான் தோசை | முள்முருங்கை அடை |

இன்னும் பல .......



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**இயல் -- 3 ஒரு மதிப்பெண் வினா விடை**

1. கூற்று –"கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்
   விளக்கம் -- கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
   அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி
   இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு
2. காவடி சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவா்
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியாா்
3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க
   அ) வெள்ளிவீதியார் -- 1) புறநானூறு
   ஆ) அண்ணாமலையார் -- 2) சி.சு. செல்லப்பா
   இ) வாடிவாசல் -- 3) குறுந்தொகை
   ஈ) இளம்பெருவழுதி -- 4) காவடிசிந்து
4. "இனிதென" இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக
   அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
   ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்
   இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே, தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்
   ஈ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.
5. பகுபத உப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உப்புகள் யாவை?
   அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
   ஆ) பகுதி, இடைநிலை, சாரியை இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி
6. ஒப்புரவு என்பதன் பொருள்
   அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
7. பகுபத உறுப்புகளின் எண்ணிக்கை அ) 4 ஆ) 5 இ) 6 ஈ) 7
8. ஒரு சொல்லின் அடிச்சொல் ...................... ஆகும்
   அ) விகுதி ஆ) இடைநிலை இ) சந்தி ஈ) பகுதி
9. பெயர்ப் பகுபதத்தில் வரும் இடைநிலை
   அ) இறந்தகால இடைநிலை ஆ) நிகழ்கால இடைநிலை
   இ) எதிர்கால இடைநிலை ஈ) பெயர் இடைநிலை
10. சந்தி என்பதற்கு ................ என்று பெயர்.
    அ) பகுதி ஆ) விகுதி இ) இடைநிலை ஈ) புணர்ச்சி
11. துன்பப்படுபவர் ........
    அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர் இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்
12. ஒப்புரவு என்பதன் பொருள் .........
    அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
13. பொருத்துக
    அ) வாழ்பவன் -- 1) காத்திருப்பவன்
    ஆ) வாழாதவன் -- 2) மருந்தாகும் மரமானவன்
    இ) தோன்றுபவன் -- 3) ஒத்ததறிபவன்
    ஈ) வெல்ல நினைப்பவன் -- 4) புகழ் தரும் பண்புடையவன்
    உ) பெரும் பண்புடையவன்-- 5) இசையொழித்தவன்
    -- 6) வீழ்பவன்

**இயல் -- 3**

1. Education is the most powerful weapon. Which you can use to change the world
2. Looking at beauty in the world is the first step of purifying the mind.
3. Culture does not make people. People make culture
4. A People without the knowledge of their past history and culture is like a tree without roots.
5. A nations culture resides in the hearts and in the soul of its people.

**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

1. குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள், என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.
2. அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.
3. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்
4. தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்
5. சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**கீழ்க்காணும் செய்தியைப் படித்து அறிவிப்புப் பதாகை ஒன்றை உருவாக்குக.**

தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கு

| | |
|---|---|
| ஜனவரி – 10, மதுரை தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும், பண்பாடு குறித்தான தேடலின் தேவை குறித்தும் சிறகுகள் சமூக அமைப்பின் சார்பாக ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. | மதுரையை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சமூகநல அமைப்பான சிறகுகள் சார்பில் ஒருநாள் கருத்தரங்கம் தெப்பக்குளம் அருகில், பாரதி கலைக்கூட அரங்கில் ஜனவரி 13ஆம் நாள் நடைபெற உள்ளது. இதில் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும் தொலைத்த பண்பாட்டைமீட்டெடுப்பது குறித்தும் "பண்பாடுகளால் வாழும் தமிழர்" என்னும் தலைப்பில் சமூக ஆர்வலரும் கவிஞருமான அன்பரசி பேசவிருக்கிறார். இதன் இறுதிப்பகுதியாகக் கலந்துரையாடலும் நடைபெற இருக்கிறது. விருப்பம் உள்ள சமூக ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என்று சிறகுகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான இனியன் தெரிவித்துள்ளார். |

**இயல் -- 3 கலைச்சொல் அறிவோம்** 1. Ethnic Group 2. Prefix 3. Earth Environment 4. Suffix 5. Rootword Dictionary 6.Cultural Elements

**இயல் -- 4**

1. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு கோடையில் கொட்டும் பூக்களை எண்ணச் சொல்கிறார்கள் என்னச் சொல்பவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
2. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் .................. என்பதாகும்.
   அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்
3. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும்கொண்ட நூல்
   அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
4. நிழல்போலத் தொடர்ந்தான் -- இது எவ்வகை உவமை?
   அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு
5. சரியான விடையைத் தேர்க

| | | |
|---|---|---|
| அ) கல்வி அழகே அழகு | -- | 1) தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைப்பாடல் |
| ஆ) இளமையில் கல் | -- | 2) திருமந்திரம் |
| இ) துணையாய் வருவது தூயநற்கல்வி | -- | 3) ஆத்திசூடி |
| ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் | -- | 4) திருக்குறள் |
| | -- | 5) நாலடியார் |

   i) அ – 2, ஆ -- 3, இ -- 4, ஈ -- 1 ii) அ -- 3, ஆ -- 4, இ - 1, ஈ -- 2
   iii) அ - 5, ஆ - 3, இ - 2, ஈ - 1 iv) அ -- 4, ஆ -- 1, இ -- 2, ஈ --5
6. ஒட்டுப் போடாத
   ஆகாயம் போல -- இந்த
   உலகமும் ஒன்றேதான் ..... -- இக்கவிதையில் பயன்றுவருவது
   அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி
7. கீழ்க்காண்பனவற்றுள் 'இறைச்சி' பற்றிய கூற்றைத் தேர்க.
   அ) குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்
   ஆ) ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்.
   இ) வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்.
   ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்
8. பொருத்துக

| | | |
|---|---|---|
| அ) புலிபோலப் பாய்ந்தான் | -- | 1) வடிவம் |
| ஆ) மழை போலக் கொடுக்கும் கை | -- | 2) உரு |
| இ) துடி போலும் இடை | -- | 3) பயன் |
| ஈ) தளிர் போலும் மேனி | -- | 4) வினை |

   i) 4,3,1,2 ii) 4,3,2,1 iii) 3,1,4,2 iv) 3,12,4

9. பொருத்துக
   அ) தொல்காப்பியம் -- 1) சங்க நூல்
   ஆ) திருக்குறள் -- 2) பக்தி நூல்
   இ) புறநானூறு -- 3) அற நூல்
   ஈ) திருவாசகம் -- 4) இலக்கண நூல்
   i) 4,3,2,1 ii) 3,4,1,2 iii) 3,1,4,2 iv) 4,3,1,2
10. கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும் -- என்று கூறும் நூல்
   அ) திருக்குறள் ஆ) நாலடியார் இ) திரிகடுகம் ஈ) ஆத்திச்சூடி

**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

பள்ளிகூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகையக் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

**சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

1) கால்நடை 2) பிண்ணாக்கு 3) எட்டுவரை 4) அறிவில்லாதவன்
5) தங்கை 6) வைகை 7) நஞ்சிருக்கும்

**கலைச்சொல் அறிவோம்**

1. Education Committee 2. Infrastricture 3. Classical Language
4. Ancestor 5. Value Education 6. Mental Abilities

**இயல் -- 5**

1. பொருந்தாததைத் தேர்க
   அ) ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன
   ஆ) ஒவ்வொருநாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள் கிழமை, நேரம் நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் செய்திகளை எழுதியுள்ளார்
   இ) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது
   ஈ) ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எட்டுத்திங்கள் தேவைப்பட்டன.
2. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
   அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு இ) தலைமைத் துவிபாஷி
   ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
3. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு
   அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்
   இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை
4. சரியானதைத் தேர்ந்தெடுக்க
   அ) வரை – மலை ஆ) வதுவை -- திருமணம் இ) வாரணம் -- யானை ஈ) புடவி – கடல்
   i) அ, ஆ, இ -- சரி ஈ -- தவறு ii) ஆ, இ, ஈ -- சரி, அ – தவறு
   iii) அ, இ, ஈ -- சரி, ஆ – தவறு iv) அ, ஆ, ஈ, -- சரி, இ -- தவறு
5. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது
   அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
6. பொருத்துக.
   அ) நேரிசை ஆசிரியப்பா -- 1) முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும்
   ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா -- 2) அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது வரும்
   இ) நிலைமண்டில ஆசிரியப்பா -- 3) இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்
   ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா -- 4) எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்
7. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ...................... நினை.
   அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
   இ) மதியால் கெட்டவரை ஈ) சொல்லேர் உழவரை
8. பொருள் கூறுக அ) ஏமம் ஆ) மருந்துழைச் செல்வான்
9. இலக்கணக் குறிப்புத் தருக. அ) கெடுக ஆ) குறிப்புணர்வார்
10. பொருத்துக.
   அ) 480 காசு -- 1) 1 பணம்
   ஆ) 60 காசு -- 2) ஒரு வராகன்
   இ) 8 பணம் -- 3) ஒரு ரூபாய்
   ஈ) 24 பணம் -- 4) 1 ரூபாய்
   அ) 4,1,3,2 ஆ) 4,1,2,3 இ) 3,1,4,2 ஈ) 3,1,2,4



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

11. பொருத்துக

அ) 1 பொன் -- 1) ½ வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்க நாணயம்
ஆ) 1 வராகன் -- 2) 14 மதிப்புள்ள தங்க நாணயம்
இ) 1 மோகரி -- 3) 3 அல்லது 3.2 ரூபாய்
ஈ) 1 சக்கரம் -- 4) ½ வராகன்

அ) 4,3,2,1 ஆ) 4,1,2,3 இ) 3,1,4,2 ஈ) 3,1,2,4

கலைச்சொல் அறிவோம் 1. Document 2. Backwater 3. Agreement 4. INvasion 5. Culture 6. sailor

மொழியோடு விளையாடு

**கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.**




**புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)

1. எலியும் நுழையும், எழிலரசி கையும் நுழையும் …..
2. அடிக்கவும் செய்யலாம், கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ……………
3. கண்ணிலும் எழுதலாம், வெண்தாளிலும் எழுதலாம் ………………………..
4. அறிவின் பெயரும் அதுதான், அம்புலியின் பெயரும் அதுவேதான் ………………
5. பூவின் உறுப்பும் நானே, புன்னகையின் பிறப்பிடமும் நானே …………..
6. வண்டியையும் இயக்கும், பெரும் கப்பலையும் தாங்கும் ……………………

இயல் -- 6

1. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மநாமால் வெளியிடப்பட்டது, 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்பட்டது. அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதைநூல், திருச்சாழல் இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை
2. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க
   அ) விரியன் -- 1) தண்டை
   ஆ) திருகுமுருகு -- 2) காலாழி
   இ) நாங்கூழ்ப்புழு -- 3) சிலம்பு
   ஈ) குண்டகப்பூச்சி -- 4) பாடகம்
   i) 3 4 2 1 ii) 3 1 4 2 iii) 4 3 2 1 iv) 4 1 3 2
3. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று
   அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை
4. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்
   அ) மூதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்
5. கூற்று 1: தஞ்சைப் பெரியகோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்
   கூற்று 2: அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள் ∴பிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை
   அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு
   இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி
6. சமரச சன்மார்க்க சபை என்னும் நாடகக் குழுவை உருவாக்கியவர்
7. தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் யார்?



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

1. தனிமொழி -- அறிவு: ………………….. வண்ண மயில், பொது மொழி, …………………
2. கார்காலம் …………….. குளிர்காலம் -- ஐப்பசி. கார்த்திகை, …………….. மார்கழி, தை
3. எழுத்து, சொல், …………, யாப்பு, ……………,
4. எழுத்து, ………….., , சீர், தளை, …………………, தொடை
5. சேரன் -- வில், சோழன் -- ……………………, ……………….., -- மீன்

**கலைச்சொல் அறிவோம்** 1. Fine Arts 2. Grain Warehouse 3. Documentary 4. Disaster 5. Inscription / Epigraph 6. Myth

**இயல் -- 7**

1. ஜனப்பிரளயம் 'என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
   அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை
2. "அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்" யார் யாரிடம் கூறியது?
   அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
   இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்
3. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் -- இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்
   அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்
   இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்
4. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க
   அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்
5. பசுவய்யா என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியவர் யார்
6. காற்றில் கலந்த பேராசை வெளிவந்த இதழ்
7. சேர மன்னர்களின் பத்துப் பேரின் சிறப்புகளை எடுத்தியம்பும் நூல்

**அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக**

1. வேவு பார்த்திடுவான், ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி) -- …………………..
2. அறிவைத் தேடிப் போகுமிடம், உலகம் அறிய உதவுமிடம் (அகம்) -- …………
3. வந்தால் மகிழ்ச்சி இது, உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) -- …………..
4. வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி, பட்டம் வாங்கினவன்? (தாரி) -- …………….
5. அளந்து அளந்து கொட்டுவான், அகம் மகிழத் தந்திடுவான் (ஆள்) -- ………….

**இயல் -- 8**

1. பூஜை, விஷயம், உபயோகம் -- என்பவை முறையே ………… , ………… , …………. என்று தமிழில் வழங்கப்படும். அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
   இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி
2. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? -- இது எவர் மொழி?
   ஆ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்
3. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக
   அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறனே.
   ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.
   இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.
   ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.
4. தமிழின் முதல் பாவடிவ நாடகநூல்
   அ) இரகசியவழி ஆ) மனோன்மணீயம் இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு
5. கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம்பெற்ற மரபு
   அ) பெயர்மரபு ஆ) வினைமரபு இ) ஒலிமரபு ஈ) இவை மூன்றும்

**இயல்-7** 1. Strategies 2. Equality 3. Trade Union 4. Debate 5. Multiple Personality 6. Pseudonym



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com